**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 223 /2022**

**Deposition of P.W.**4

Name : திரு. ஜாண் கிங்சிலி

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:09.07.2025

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் தக்கலை காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் அதே காவல்நிலையத்தில் 18.09.2020ம் தேதி காவல்நிலைய பணியில் இருந்தேன். தக்கலை காவல்நிலைய குற்ற எண். 558/2020 வழக்கு சம்மந்தமாக 750 மில்லி கொள்ளவு உள்ள கண்ணாடி பாட்டிலில் பழுப்பு நிற திரவத்தை நீதித்துறை நடுவர் நீதிமன்ற ஆர்.பி.எண்.51/2020ஐ திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு கொண்டு சென்று ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. எதிரியை எனக்குத் தெரியாது. ஆர்.பி.எண்.51/2020ஐ திருநெல்வேலி வட்டார தடய

அறிவியல் ஆய்வகத்திற்கு கொண்டு சென்றது மட்டும் தான் எனக்குத் தெரியும். அந்த சொத்தை தக்கலை காவல்நிலையத்தில் வைத்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். சொத்தை மூடப்பட்ட உறையில் வைத்து ஒப்படைத்தார்கள் என்றால் சரிதான். அந்த உறையினுள் என்ன இருந்தது என்று எனக்குத் தெரியாது. ஆர்.பி.எண். படி சாராய ஊறல் என்று தெரியும். ஆனால், நேரடியாக பார்க்கவில்லை. ரசீது மட்டும் பெற்று வந்தேன். அறிக்கையை நான் பெறவில்லை. பாட்டிலில் நிலைய பொறுப்பு அதிகாரியின் முத்திரை இருந்ததா என்று நான் பார்க்கவில்லை. சம்பவம் பற்றி தெரியாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.